**செய்தி வெளியீடு எண் : 2028** **நாள் : 07.10.2023**

**தமிழ்நாட்டின் நீலகிரியில் இயற்கை காரணங்களால் புலிகள் இறப்பு – தேசிய புலிகள் பாதுகாப்பு ஆணையத்தின் அறிக்கை**

தேசிய புலிகள் பாதுகாப்பு ஆணையத்தின் 6.10.2023 தேதியிட்ட அறிக்கையில், தமிழ்நாட்டின் நீலகிரியில் குட்டிகள் உட்பட 10 புலிகள் சமீபத்தில் இறந்தது, தற்போதைய எண்ணிக்கையின் அளவு அதிகரிப்பு மற்றும் நிலப்பரப்பில் பரவலான இயக்கவியல் பின்னணியில் அச்சமூட்டுவதாக இல்லை என்று தெளிவுபடுத்தியுள்ளது. மேலும் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள புலிகள் காப்பக நிர்வாகத்தை தயார்படுத்துமாறு கேட்டுக் கொண்டனர்.

தேசிய புலிகள் பாதுகாப்பு ஆணையம் என்பது சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனம் அமைச்சகத்தின் (MoEF&CC) கீழ் உள்ள ஒரு உயர் அமைப்பாகும். இது புலிகளின் பாதுகாப்பு மற்றும் புலிகள் காப்பகங்களை நிர்வகித்தல் தொடர்பாக இந்தியாவில் உள்ள புலிகள் காப்பகங்களுக்கு வழிகாட்டுதல்களை வழங்குகிறது.

தமிழகத்தில் 2006 அகில இந்திய புலிகள் கணிப்பின்படி 76 புலிகள் எண்ணிக்கை இருந்தது. 2022–ல் எடுக்கப்பட்ட மதிப்பீட்டின்படி தற்போது 306 புலிகளாக அதிகரித்துள்ளது. அதே நேரத்தில், முதுமலை புலிகள் காப்பகத்தில் 2006 இல் 51 ஆக இருந்த புலிகளின் எண்ணிக்கை, 2022ம் ஆண்டு மதிப்பீட்டின்படி 114 ஆக அதிகரித்துள்ளது.

தேசிய புலிகள் பாதுகாப்பு ஆணையம் நான்கு வருடங்களுக்கு ஒரு முறை ஒவ்வொரு புலிகள் காப்பகத்திலும் "மேலாண்மை திறன் மதிப்பீட்டை" நடத்தி மதிப்பெண் வழங்குகிறது. அதன் அடிப்படையில் முதுமலை புலிகள் காப்பகத்திற்கு 2010, 2014 & 2018–ம் ஆண்டுகளில் "மிகவும் நல்ல" மதிப்பீடு வழங்கப்பட்டது. 2022–ம் ஆண்டில் "சிறந்த மதிப்பெண்" (90.15%) வழங்கப்பட்டது. 2022–ம் ஆண்டில், "விளைவுப் பிரிவில்" (outcomes) (50/50 மதிப்பெண்கள்) அதிகபட்ச மதிப்பெண்களை பெற்ற ஒரே புலிகள் காப்பகம் முதுமலை புலிகள் காப்பகம் மட்டுமே.

விளைவு பிரிவில் அதிக மதிப்பெண்கள் பெற்ற பண்புகள்:

1) வேட்டை தடுப்பு முகாம்களை நிறுவியதில்.

2)வேட்டை தடுப்பு காவலர்களை ஈடுபடுத்தியதன் மூலம் பாதுகாப்பை வலுப்படுத்தியது.

3) அச்சுறுத்தும் உயிரினங்களின் எண்ணிக்கையை அதிகரித்ததில்

4) புலிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதைக் காட்டியது.

தேசிய புலிகள் பாதுகாப்பு ஆணையத்தின் கடிதம் எண். F.N. 7–7/( vol VII)/ 2012–NTCA (ROSZ)/949– 955, தேதி 20.9.23, இன் படி IGF, தேசிய புலிகள் பாதுகாப்பு ஆணையம், பெங்களூரு, டாக்டர். கே. ரமேஷ், விஞ்ஞானி–F, இந்திய வனவிலங்கு நிறுவனம் & வனவிலங்கு குற்றக் கட்டுப்பாட்டுப் பணியகத்தின் (WCCB) மண்டல துணை இயக்குநர் டாக்டர் கிருபாசங்கர் மற்றும் சென்னையைச் சேர்ந்த WCCB வனவிலங்கு ஆய்வாளர் திரு. டோக்கி ஆதிமல்லையா ஆகியோர் கொண்ட குழு 25.09.2023 அன்று நீலகிரியில் ஆகஸ்ட் மற்றும் செப்டம்பர், 2023 மாதங்களில் 10 புலிகள் இறந்தது குறித்து விரிவான கள மதிப்பீட்டை மேற்கொண்டனர்.

கள மதிப்பீட்டின் நோக்கம் (அ) சிக்கலின் தீவிரத்தன்மையின் அளவைக் கண்டறிவது மற்றும் (ஆ) மேலாண்மை நடவடிக்கைகளை பரிந்துரைப்பது.

குழுவின் அவதானிப்புகள் மற்றும் அனுமானங்கள்:

1) முதுமலை புலிகள் காப்பகம் அதிக அடர்த்தி கொண்ட பகுதியாக இருப்பதால், புலிகளின் நடமாட்டத்தின் முதல் தேர்வு, சாத்தியமான மோதலைத் தவிர்ப்பதற்காக, பிற புலிகளால் சாத்தியமான பொருத்தமான, ஆனால் குறைவான/ஆக்கிரமிக்கப்படாத பகுதிகளாக இருக்கும். எனவே, நீலகிரி வன கோட்டத்தில் புலிகளின் எண்ணிக்கையில் சமீபத்திய அதிகரிப்பு, புலிகளால் ஆக்கிரமிக்கப்பட்ட ஒப்பீட்டளவில் குறைவாக உள்ளது என்பது எதிர்பார்க்கப்படும் இடம் மட்டுமே மற்றும் இதுபோன்ற சூழ்நிலையில் புலிகளின் இயல்பான எண்ணிக்கை இயக்கவியலின் பின்னணியில் வைக்கப்பட வேண்டும்.

2) புலிகளின் உயிர்வாழ்வு விகிதம் எண்ணிக்கை, அடர்த்தியைப் பொறுத்தது என்று NTCA கூறுகிறது. பொதுவாக, வயது முதிர்ந்த பெண் புலிகள் ஒரு பிரசவத்தில் 2–3 குட்டிகளை (சில சமயங்களில் 5 வரை) பிரசவிக்கும். அதில் 50% குட்டிகள் நோய், பட்டினி மற்றும் சிசுக்கொலை போன்ற பல காரணிகளால் இறக்கும். சேகூர் பகுதியில் 2 வார குட்டிகள் இறப்பதற்கு சாத்தியமான காரணம்: இரண்டு குட்டிகளின் (குறைந்தபட்சம் ஒன்று) உடல் நலம் குன்றியதாக இருக்கலாம். இது அடுத்தடுத்த பிரசவங்களில் தகுந்த குட்டிகளை வளர்ப்பதற்கான ஆற்றலைச் சேமிப்பதற்காக தாயால் கைவிடப்படுவதற்கு வழிவகுக்கும். மேலும் இளைய வயதில் குட்டிகள் பிரசவம் (அனுபவமற்ற தாய்) குட்டிகளை கைவிடப்படுவதற்கான காரணங்களில் ஒன்றாக இருக்கலாம்.

3) சின்ன குன்னூர் பகுதியில் உயிரிழந்த நான்கு குட்டிகள் இரண்டு மாதங்களே ஆனவை என தேசிய புலிகள் பாதுகாப்பு ஆணையம் தெரிவித்துள்ளது. இந்த குட்டிகள் இறப்பதற்கு இரண்டு முக்கிய காரணங்களை அந்த அறிக்கை குறிப்பிட்டுள்ளது. முதலாவதாக, இந்த வயதில் குட்டிகள் தாயால் கொல்லப்படும் உணவை உண்ணத் தொடங்குகின்றன. அதனால் குட்டிகளை வளர்க்க தாய் அடிக்கடி இரையை கொல்ல வேண்டும். பின்னர் இரை அடர்த்தி குறைவாக இருந்தால் தாய் நீண்ட தூரம் பயணிக்க வேண்டியிருக்கும். இது நீண்ட காலத்திற்கு குட்டிகளை கவனிக்கப்படாமல் இருப்பதற்கு வழி வகுக்கிறது. மேலும் குட்டிகள் ஈன்ற இடம் பாதுகாப்பற்றதாகக் கருதப்பட்டால், தாய் குட்டிகளை (2-3 மாதங்களுக்குப் பிறகு) வேறு இடத்திற்கு மாற்றும். குறிப்பாக இந்த இடம் குறிப்பிடத்தக்க மனித இடையூறுகளால் சூழப்பட்டுள்ளது. எனவே, இந்த குட்டிகள் நீண்ட காலத்திற்கு தாயினால் கவனிக்கப்படாமல் விடப்பட்டிருக்கலாம். எனவே, நீண்ட பட்டினியால் குட்டிகள் இறந்திருக்கலாம்.

4) தேசிய புலிகள் பாதுகாப்பு ஆணையம் மேலும் குறிப்பிட்டது என்னவென்றால் எந்தவொரு பிராந்திய பெரிய மாமிச உண்ணிகளுக்கும் உட்பூசல் என்பது ஒரு பொதுவான நிகழ்வாகும். இது எண்ணிக்கை, அடர்த்தி, பாலின விகிதம் மற்றும் வளங்கள் மற்றும் துணையின் கிடைக்கும் தன்மையைப் பொறுத்தது. எனவே நடுவட்டம் மற்றும் கார்குடி ஆகிய இரண்டு இடங்களில் புலிகள் இறந்தது உட்பூசல் சண்டையின் காரணமாகும்.

5) அவிலாஞ்சி பகுதியில் இரண்டு புலிகள் (இரண்டு ஆண்களும்) விஷம் கலந்த இறந்த மாட்டின் உணவை சாப்பிட்டதால் இறந்தது என தெளிவாகத் தெரிகிறது. இறந்த மாட்டில் விஷம் வைத்த நபர் ஏற்கனவே வன துறையால் கைது செய்யப்பட்டிருக்கிறார். இது முற்றிலும் பழிவாங்கும் கொலை என்று தேசிய புலிகள் பாதுகாப்பு ஆணையம் கூறுகிறது.

இறந்த புலிக்குட்டிகளின் தாய்களை அடையாளம் காண எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் (சேகூர் பகுதியில் 2 குட்டிகள் மற்றும் சின்ன குன்னூர் பகுதியில் 4 குட்டிகள்) குறித்து வனத்துறை கூறியது:

புலிகளின் நடமாட்டத்தை கண்காணிக்க 6 குட்டிகள் இறந்த இடங்களை சுற்றி ட்ராப் கேமராக்கள் பொருத்தப்பட்டன. சின்ன குன்னூர் பகுதியில் 40 இடங்களிலும், சேகூர் பகுதியில் 18 இடங்களிலும் கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன. மேலும் மேற்கண்ட பகுதிகளில் 6 தனிப்படைகள் மூலம் தீவிர தேடுதல் பணியும் நடைபெற்று வருகிறது. சின்ன குன்னூர் பகுதியில் பொருத்தப்பட்ட

கேமராக்களில் இருந்து 15 புலி படங்கள் கண்காணிப்பு குழுவினருக்கு கிடைத்துள்ளது. இதில் 4 பெண் புலிகள். மேலும் சின்ன குன்னூர் பகுதியில் 4 பெண் புலி படங்கள் கேமராக்களில் பதிவாகி உள்ள இடங்களில், 6 எச்ச மாதிரிகளை குழுக்கள் சேகரித்துள்ளனர். குட்டிகளின் சாத்தியமான தாய்களை அடையாளம் காண சேகரிக்கப்பட்ட அனைத்து மாதிரிகளும் டிஎன்ஏ பகுப்பாய்விற்காக ஆய்வகங்களுக்கு அனுப்பப்பட்டு உள்ளது. சேகூர் பகுதியில் 5 புலி படங்கள் கிடைத்துள்ளன. இதில் 4 பெண் புலிகள். புலிகளின் நடமாட்டம் குறித்த கூடுதல் தகவல்களைப் பெற, அருகிலுள்ள அனைத்து பகுதிகளையும் உள்ளடக்கும் வகையில் தேடுதல் தற்போது விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

சமீபத்தில் நீலகிரியில் 10 புலிகள் உயிரிழந்தது பரவலான கவலையை ஏற்படுத்தியுள்ளது. பாதுகாக்கப்பட்ட பகுதிகளில் பாதுகாப்பு நடை முறைகளை மேம்படுத்த தமிழக அரசு பல நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. வேட்டை தடுப்பு காவலர்களை வன காவலர்களாக அரசு முறைப்படுத்தியுள்ளது. நீலகிரி கோட்டம் மற்றும் தாங்கல் (Buffer) கோட்ட எல்லையில் உள்ள முதுமலை தாங்கல் (Buffer) பகுதிகளில் கூடுதலாக மூன்று வேட்டை தடுப்பு முகாம்கள் அமைத்து பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. புலிகளைப் பாதுகாக்கும் முயற்சியில் துறை அதிக பட்ச முயற்சிகள் எடுக்கும்.

**முதன்மை தலைமை வன பாதுகாவலர் மற்றும்**

**தலைமை வன உயிரின காப்பாளர்**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in